DECEMBER 2023 **P/ID 35323/PTL3N**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு, முறையே 50 சொற்களில் விடையெழுதுக.

1. பேசுகின்றேன் – இது என்ன பால்?

2. பாடுகிறாய் – எந்த இடம்?

3. வண்ணச் சினைச் சொல்லின் அமைப்பை எழுதுக.

4. வியங்கோள் வினைக்குச் சான்று காட்டுக.

5. சிறப்புப் பெயர்கள் இரண்டினை எழுதுக.

6. அதிக உருபுகளைக் கொண்ட வேற்றுமை எது?

7. 'படம் பார்' என்னும் தொகையை விரித்தெழுதுக.

8. கருவிப் பொருள் வேற்றுமை எது?

9. 'என்னின் பெரியன்' என்பது எந்த வேற்றுமை?

10. சினை–பொருள் கூறுக.

11. வினையாலணையும் பெயர்கள் இரண்டினை எழுதுக.

12. நும்மின் திரிபெயர் எது?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு, முறையே
250 சொற்களில் விடையெழுதுக.

13. செப்பும் வினாவும் ஒத்து அமைய வலியுறுத்துக.

14. செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல் – விளக்குக.

15. வண்ணச்சினைச் சொல் குறித்து எழுதுக.

16. பொருள் செல் மருங்கில் வேற்றுமை சாரும் – விளக்குக.

17. வேற்றுமை மயங்கியல் கூறும் ஆகுபெயர் இலக்கணத்தை எழுதுக.

18. உயர்திணைப் பெயர்கள் விளியேற்குமாற்றை விளக்குக.

19. விளியேலாதவை எவை?

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு, முறையே
500 சொற்களில் விடையெழுதுக.

20. இருதிணை, ஐம்பால், மூவிடம் ஆகியன குறித்து விளக்குக.

21. வேற்றுமை மயக்கம் குறித்து நீர் அறிவன யாவை?

22. 'இரு பாற்று என்ப பொருண்மை நிலை' – விளக்குக.

23. உமது பாடத்தால் அறியலாகும், எவையேனும் ஐந்து இலக்கணக் கலைச் சொற்களை விளக்குக.

24. தமிழ்ச் சொல்லியல் குறித்து விளக்குக.

———————